பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

நல்லூர் ... மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 28 செவ்வாய்க்கிழமை (11-02-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 76

# முல்லைத்தீவில் 25 படையினர் பலி!

# 7 காவலரண்கள் தகர்க்கப்பட்டன!!

## அதிகாலை நடந்த அதிரடி

யாழ்ப்பாணம், பெப்ரவரி 11

**முல்லைத்தீவு இராணுவ முகாமின் கடற்கரையோரப் பக்கமாக அமைந்திருந்த ஏழு காவலரண்கள் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் தகர்க்கப்பட்டன. இத்தாக்குதலில் ஓர் இராணுவ அதிகாரி உட்பட இருபத்தியைந்துக்கும் அதிகமான படையினர் உயிரிழந்தனர்; மேலும் பலர் காயமுற்றனர்; ஐம்பது கலிபர் துப்பாக்கி ஒன்று உட்பட இருபது நவீன ஆயுதங்களையும் பல இராணுவத் தளபாடங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.**

சுமார் 15 நிமிட நேரம் இடம்பெற்ற இத்தாக்குதலின் போது, காவலரண் பகுதி இராணுவத்தினருக்கு உதவுவதற்காக வந்த இராணுவ அணியும் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி, பின்வாங்கிச் சென்றது என்று தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலில் உயிரிழந்த படையினரைத் தவிர, மேலும் பலர் மிதிவெடிகளில் சிக்கி படுகாயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல் நடந்த சமயம் படையினருக்கு உதவியாக, முல்லைத்தீவு பிரதான இரா

[2 ஆம் பக்கம் பார்க்க]

## 50 கலிபர் துப்பாக்கி உட்பட 20 நவீன ஆயுதங்கள் மீட்பு!

யாழ்ப்பாணம், பெப். 11

நேற்று முல்லைத்தீவில் புலிகள் நடத்திய அதிவேக அதிரடித் தாக்குதலின் போது புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் விவரம் வருமாறு:-

★ 50 கலிபர் துப்பாக்கி — 1
★ அதற்குரிய ரவைகள் — ஆயிரம்
★ ஆர். பி. ஜி. — 1
★ அதற்குரிய ஷெல்கள் — 4
★ மினி மினி எல். எம். ஜி. — 1
★ அதற்குரிய ரவைகள் — மூவாயிரம்
★ ரீ 56 ரகத் துப்பாக்கி — 18
★ அதற்குரிய மகஸின்கள் — 32
★ அதற்குரிய ரவைகள் — மூவாயிரம்
★ எவ். என். சி ரகத் துப்பாக்கி — 1
★ அதற்குரிய மகஸின் — 1
★ துப்பாக்கி ஷெல்கள் — 3
★ ஏ. கே. எல். எம். ஜி. மகஸின் — 2
★ அதற்குரிய தொடர் ரவைகள் — 128
★ வெளிச்சக் குண்டு — 1

இவற்றுடன் தொலைத் தொடர்பு சாதனம், தொலை நோக்கி, இரவுப் பார்வை சாதனம், தொலைபேசி, என்பனவும் இராணுவ காவலரண் பகுதியில் இருந்து கைப்பற்றப்பட்டன.

[உ-5]

## புலிகளின் தலைவர்களை குவாக்கர்ஸ் குழு சந்தித்தது

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ்ப்பாணம் வந்திருக்கும் 'குவாக்கர்ஸ்' சமாதானக் குழுவின் பிரதிநிதிகள் நேற்று மாலை விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்து சுமார் இரண்டு மணி நேரம் பேச்சு நடத்தினர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் கோ. மகேந்திரராஜா [மாத்தயா], அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோரை இக் குழுவினர் சந்தித்துப் பேசினர்.

புலிகளுடன் பேச்சு நடத்திய குழுவில் ஜெனிவாவைச் சேர்ந்த ஜோல் மக்கிலண்ட் அமெரிக்காவில் வதியும் இந்தியரான இராமமூர்த்தி ஆகியோர் இடம்பெற்றனர்.

நேற்றைய பேச்சுகள் பற்றிய விவரம் ஏதும் வெளியிடப்படவில்லை.

[உ-3]

## யாழ். ஆஸ்பத்திரியில் ஷெல்!

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ். போதனா ஆஸ்பத்திரியில் நேற்று மாலை 5.15 மணியளவில் குண்டொன்று வெடித்தது.

மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டே ஆஸ்பத்திரியில் விழுந்து வெடித்ததாகக் கருதப்படுகிறது.

குண்டு வெடித்த சமயம் மண்டைதீவுப் பகுதியிலிருந்து படையினர் வேட்டுகளைத் தீர்த்துக் கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை —

யாழ். கோட்டை மற்றும் நாவாந்துறைப் பகுதிகளிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன என்று தெரிவிக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கண்காணிப்பின் கீழ் இயங்கும் ஆஸ்பத்திரிப் பாதுகாப்பு வலயத்துக்குள் — அதுவும் ஆஸ்பத்திரிக்குள் ஷெல் — விழுந்து வெடித்தது குறிப்பிடத்தக்கது.

பழைய வெளி நோயாளர்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வடக்கில் எப்போது ராணுவ நடவடிக்கை?

### பல்வேறு ஊகங்கள் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 11

வடபகுதியில் மேற்கொள்ளப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் பாரிய இராணுவ நடவடிக்கை எப்போது இடம் பெறும்? இது பற்றி பலவித ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

பாரிஸில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்குப் பின்னர் சில வாரங்கள் கழித்து இந்த உத்தேசத் தாக்குதல் நடத்தப்படலாம் என்று ஒரு தரப்பு கூறுகிறது.

உத்தேசத் தாக்குதல் இன்னும் ஆகப்பிந்தியே நடத்தப்படும் என்று வேறு சிலர் கூறுகின்றனர்.

இதே வேளை —

பத்திரிகைகளில் வெளிவருவது போன்று இராணுவ நடவடிக்கை ஏதும் இடம் பெறாது என்று தம்மைச் சந்தித்த தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. ஒருவரிடம் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார் என்றும் மற்றொரு செய்தி தெரிவித்தது.

இந்நிலையில் —

கடந்த வாரம் கொழும்பில் உள்ள தமிழ் அரசியல் வாதி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அமைச்சர்கள் குழு தீவுப் பகுதிக்கு விஜயம்

யாழ்ப்பாணம், பெப். 11

தீவுப் பகுதியில் சிவில் நிர்வாகத்தைச் சீராக்கும் நடவடிக்கைகளை ஆராய்வதற்காக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அமைச்சர்கள் தலைமையிலான உயர்மட்டக் குழு ஒன்று ஊர்காவற்றுறைக்கு விஜயம் செய்தது.

அந்தக் குழுவில் புனர்வாழ்வு சமூக நலத்துறை அமைச்சர் பி. தயாரத்தினா, உணவுக் கூட்டுறவுத் துறை அமைச்சர் எஸ். மல்லிமாராய்ச்சி ஆகியோரும், அமைச்சுகளைச் சேர்ந்த உயர் அதிகாரிகளும், இராணுவ உயர் அதிகாரிகளும் இடம்பெற்றனர்.

கூட்டுப் படைத் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவும் அமைச்சர்களுடன் வந்திருந்தார்.

ஊர்காவற்றுறையில் உள்ள பாடசாலை ஒன்றில் தீவுப் பகுதிகளைச் சேர்ந்த பிரஜைகள் குழுப் பிரதிநிதிகளைச் சந்தித்து அமைச்சர்கள் குழு கலந்துரையாடியது.

அந்தப் பிரதேசங்களில்

[2 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



அப்ப... திருமலையை ரண களமாக்கிறது எண்டு முடிவு கட்டியிட்டினம் போலை...!

## குடாநாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வற்புறுத்து

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் சகல பொதுமக்களினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்; வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு. கிளாடியோ பிரான்ஸினி இவ்வாறு வலியுறுத்தி உள்ளார்.

தீவுப்பகுதிக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த அமைச்சர்கள் மற்றும் கூட்டுப்படைத் தளகர்த்தர் ஆகியோரிடம் அவர் நேரில் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

யாழ். குடாநாட்டு மக்கள் எப்போது என்ன நடக்குமோ என்ற பீதியுடன் வாழ்கிறார்கள். பெரும் இராணுவ தாக்குதல் தங்கள் மீது மேற்கொள்ளப்படுமோ என்ற அச்சம் அவர்கள் மத்தியில் நிலவுறது.—

அகதிகளின் நிலையோ மிகவும் மோசமாக உள்ளது. அவர்கள் அனுபவிக்கும் அசௌகரியங்கள் கணக்கில் அடங்கா. அகதிகள் எண்ணிக்கையும் நாளாந்தம் அதிகரிக்கிறது.—

உணவுப் பொருள் விநியோகம், அவற்றின் கூடிய விலைகள், எரிபொருள் கிடையாமை, மருந்துத் தட்டுப்பாடு, தொழிலின்மை போன்றவற்றால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். —என்றும் திரு. கிளாடியோ அமைச்சர் குழுவிடம் எடுத்துச் சொன்னார் என்று அறியவருகிறது.

[அ-3]

### தொண்டா யோசனைக்கு எதிராக

## திருகோணமலையில் பிக்குமார் சத்தியாக்கிரகம்!

கொழும்பு, பெப். 11

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண தொண்டமான் சமர்ப்பித்திருக்கும் யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து திருகோணமலை மாவட்ட ஐக்கிய பிக்குமார் சங்கம் விரைவில் பாதயாத்திரையும் சத்தியாக்கிரகமும் நடத்தத் தீர்மானித்துள்ளது.

கந்தளாய் அக்ரபோதி ரஜமகா விகாராதிபதி கித்துல்கொல்லே ஜினானந்ததேரோ தலைமையில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள பல்வேறு விகாரைகளைச் சேர்ந்த சுமார் நூறு பிக்குமார் இந்தப் பாதயாத்திரையிலும் சத்தியாக்கிரகத்திலும் கலந்து கொள்வர் எனத் தெரிகிறது.

இதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் திருகோணமலை மாவட்ட அமைப்பும் மற்றும் சகல வெகுஜன அமைப்புக்களும் ஒத்துழைப்பு வழங்குமென திருகோணமலை மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பி. யான எம். கே. ஏ. டீ. எஸ். குணவர்த்தனா தெரிவித்தார்.

[உ-10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் விஜேதுங்கா மீது விரைவில் நம்பிக்கையில்லாப் பிரேரணை!

## அலுவிகார, ஹமீத், ஹேரத்துக்கு எதிராகவும் வரும்

கொழும்பு, பெப். 11

எதிர்க் கட்சிப் பதில் தலைவர் அனுரா பண்டாரநாயக்காவால் ஐந்து அமைச்சர்களுக்கு எதிராகக் கொண்டு வரப்பட இருக்கும் நம்பிக்கை இல்லாப் பிரேரணைகளில் முதலாவது, பிரதம மந்திரியும் நிதி அமைச்சருமான டி. பி. விஜயதுங்காவிற்கு எதிராகக்கொண்டுவரப்படும். எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகப் பேச்சாளர் ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்தப் பிரேரணை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும்—

இரண்டாவது பிரேரணை துறைமுக மற்றும் கப்பற் போக்குவரத்து அமைச்சர் அலிக் அலுவிகாரவுக்கு எதிராகக் கொண்டு வரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மற்றைய மூன்று பிரேரணைகளும் வெளிவிவகார அமைச்சர் ஹரல்ட் ஹேரத், நீதி அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத், தகவல் கலாசார அமைச்சர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார ஆகியோருக்கு எதிராகக் கொண்டு வரப்படலாம் என்று கொழும்புச் சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. [உ-10]

# சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் நான்கு பேர் தண்டிக்கப்பட்டனர்

இராணுவ அத்துமீறல்களில் ஈடுபட்டதற்காக குறைந்தது நான்கு இராணுவ சிரேஷ்ட அதிகாரிகள் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் வேறு பல இராணுவத்தினர் பற்றிய விசாரணைகளை பாதுகாப்பு அமைச்சு ஆரம்பித்துள்ளது.

பாதுகாப்பு உயர் அதிகாரி ஒருவர் இத்தகவல்களைத் தெரிவித்தார்.

'மனித உரிமை மீறலில் ஈடுபட்ட சில அதிகாரிகள் அதற்காகத் தண்டிக்கப்படாவிட்டாலும், அவர்கள் சேவையில் இருந்து நீக்கப்படுவார்கள்.

'அந்த அதிகாரிகள் படையில் இருப்பது படையினருக்கு தீங்கானது என்று கருதப்பட்டால் அவர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவர்.

சில படையினர் நல்ல அதிகாரிகளாக, கனவான்களாக நடந்து கொள்ளவில்லை என்பது தெரிய வந்தது. அவர்கள் தண்டிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் அரசியல்வாதி ஒருவரின் உறவினராவார்— இப்படி அந்த உயர் அதிகாரி மேலும் சொன்னார்.

இதற்கிடையில் — சிரேஷ்ட அதிகாரிகள் தண்டிக்கப்பட்டதை கூட்டுப்படைகள் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா உறுதி செய்தார்.

நல்லொழுக்கக்கோவையை மீறுபவர்களுக்கு இராணுவத்தில் இடமில்லை என்றார் அவர்.

"இன்னும் சில தீய சக்திகள் இராணுவத்தில் இருப்பது தெரியும். அவர்கள் மீதும் நடவடிக்கை எடுப்போம்"— என்றும் ஜெனரல் வனசிங்கா சொன்னார்.

# பத்து பொலிஸ் அதிகாரிகளும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்

கொழும்பு, பெப். 11

உயர் பொலிஸ் அதிகாரிகள் பத்துப்பேர் மீது விசேட பொலிஸ் குழுவொன்று விசாரணை நடத்தி வருகிறது. சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் இருவரும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எண்மரும் இதில் அடங்குவர் எனத் தெரியவருகிறது.

கடந்த இரண்டு வருடங்களில் இந்த பத்து அதிகாரிகளும் சட்ட விரோத நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டது தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் இந்த விசாரணைகள் நடை பெற்று வருகின்றன.

இந்த விசாரணைகளை விரைவில் முடித்து ஒரு மாதத்திற்குள் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படி பொலிஸ் மா அதிபர் ஏர்னெஸ்ட் பெரேரா விசாரணைக் குழுவைப் பணித்திருக்கிறார்.

இரண்டு சிரேஷ்ட பொலிஸ் அதிபர்களினதும், நான்கு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களினதும் விசாரணைகள் இது வரை நடைபெற்றுள்ளன. ஏனைய நான்கு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களினதும் விசாரணை நடைபெற்றதும் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று விசாரணைக் குழுவினர் தெரிவித்தனர்.

இதற்கிடையில் மேலும் பல சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் குறித்து முறைப்பாடுகள் பொலிஸ் தலைமையகத்துக்கு கிடைத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. [த-10]

## வீரமரணம்

மட்டக்களப்பு மயிலவெட்டுவானில் கடந்த வெள்ளியன்று ரோந்து வந்த ஸ்ரீ லங்கா அதிரடிப் படை அணி மீது நடத்தப்பட்ட தாக்குதலின் போது காயமடைந்திருந்த வீரவேங்கை விஜி [மகிந்த குமார்] கடந்த சனியன்று வீரமரணமடைந்தார். [உ-5]

## முல்லைத்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ணுவ முகாம் பகுதியில் இருந்தும், மணலாறில் இருந்தும் கடும் ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இந்தத் தாக்குதலின் போது புலிகள் தரப்பில் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலின் போது முகாமுக்கு வெளியே தான் அமைத்திருந்த பாதுகாப்பு எல்லைப் பகுதியையும், ஆறு காவலரண்களையும் இழந்து இராணுவம் முகாமுக்குள் முடங்கிக் கொண்டது என்றும் —

இந்த ஆண்டில் விடுதலைப் புலிகள் இராணுவத்துடன் நேருக்கு நேர் நடத்திய முதல் தாக்குதல் இது என்றும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

## அமைச்சர்கள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இயல்பு நிலையை உருவாக்குவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அங்கு ஆராயப்பட்டது. உணவு விநியோகம், வைத்திய வசதி, போக்குவரத்து வசதி ஆகியன சம்பந்தமாக உள்ள குறைபாடுகளை அமைச்சர்கள் குழு கேட்டறிந்தது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பணிகள் குறித்தும் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது. [உ-?]

# மலையகப் போர்முனையால் படையினருக்கு 'களைப்பு'!

கொழும்பு, பெப். 11

ஊவா பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய இரண்டு தாக்குதல்களை அடுத்து மலையகத்தில் புதிய போர் முனை ஏற்பட்டுள்ளது. இந்தப் போர் முனையைச் சமாளிக்க ஆயுதப்படையினர் அழைக்கப்பட்டால். அது ஆயுதப் படையினருக்கு பெரும் 'களைப்பை' (Strain) ஏற்படுத்தும் என்று இராணுவத்தின் சில வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

ஊவாப்பகுதியில் இப்போது பாதுகாப்பு நடவடிக்கை சில துணை இராணுவப் படைப் பிரிவுகளின் ஆதரவுடன் பொலிஸாரினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

இராணுவம் பெரிய அளவில் அங்கு ஈடுபடுத்தப்படவில்லை.

இராணுவத்தினரையும் இராணுவத் தளங்களுடன் பெரும் எண்ணிக்கையில் மலைநாட்டில் பயன்படுத்துவது பெரும் செலவை ஏற்படுத்தும்.

மலைப் பிரதேசத்தில் இராணுவத்தினர் பணிபுரிய அழைக்கப்பட்டால் அது அவர்களுக்கு புதிய கஷ்டங்களை ஏற்படுத்தும்.

இப்படி இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

# மாணவர்களை அனுமதிக்க லஞ்சம் வாங்கிய அதிபர்கள்

## 50 பேர் வலையில் சிக்கியுள்ளனர்

கொழும்பு, பெப். 11

பாடசாலைகளில் மாணவர்களுக்கு அனுமதி வழங்க லஞ்சம் வாங்கினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 50 பாடசாலை அதிபர்களுக்கு எதிராக லஞ்சத் திணைக்களம் விசாரணைகள் மேற்கொள்ளவுள்ளது.

கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் இத்தகவலை வெளியிட்டன.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அதிபர்களில் 6 பேர் புதிய மாணவர்களை சேர்த்துக் கொள்ள பெற்றோர்களிடம் 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் ரூபா வரை லஞ்சம் வாங்கினார்களாம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் மூலமாகவும் இவர்கள் பணம் பெற முயற்சித்தனர் என்றும் கூறப்படுகிறது. [உ-த]

# சுப்புலக்ஷ்மி வீட்டிலிருந்து ரிவோல்வர் மீட்கப்பட்டது!

கடந்த மாதம் சென்னையில் கைது செய்யப்பட்ட தி. மு. க முன்னாள் அமைச்சர் சுப்புலக்ஷ்மி ஜெகதீசனின் பண்ணை வீட்டிலிருந்து ஒரு ரிவோல்வர், வெடி மருந்துப் பொருள்கள் மற்றும் சில இரகசிய ஆவணங்கள் பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டன.

'இந்தியா ருடே' சஞ்சிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது.

இதே வேளை—

சென்னை எழும்பூரில் மோட்டார்சைக்கிளில்சென்று கொண்டிருந்த போது விடுதலைப் புலிகள் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். அவரை விடுவிக்குமாறும் வழக்கு எதனையும் தாக்கல் செய்ய வேண்டாம் என்றும் சுப்புலக்ஷ்மி ஜெகதீசன் அப்போதைய பொலீஸ் ஆணையாளர் துரையைக் கேட்டிருந்தார்.

இதனை ஆணையாளர் துரையே தன்னிடம் கூறியதாக தற்போது கைது செய்யப்பட்டிருக்கும் முன்னாள் உள்துறைச் செயலாளர் ஆர். நாகராஜன் ஒப்புதல் வாக்கு மூலத்தில் தெரிவித்திருக்கிறாராம்.

முன்னாள் தி. மு. க அமைச்சர்கள் தங்கவேலு, சுந்தரம் ஆகியோரையும் பல பொலீஸ் அதிகாரிகள் மற்றும் அரசியல் வாதிகளையும் புலிகள் சம்பந்தப்பட்ட விவகாரங்களுடன் தொடர்புபடுத்தியும் நாகராஜன் வாக்குமூலம் அளித்துள்ளாராம்.

இதனை தொடர்ந்து இவர்களும் கைது செய்யப்படலாம் என்று அரசியல் வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன. (உ-த)

## புழல் அகதிமுகாமில் உள்ள

# 120 ஈ. பி. ஆர். எல். எவ்வினர் உண்ணாவிரதப் போர்!

தமிழ்நாட்டில் புழல் அகதிகள் முகாமில் தங்கவைக்கப் பட்டுள்ள—ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தைச்சேர்ந்த—சுமார் 120 பேர் காலவரையறையற்ற உண்ணாவிரதத்தை கடந்த 4 ஆம் திகதி ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

"முகாமுக்கு வெளியே தொழில் செய்ய அனுமதிக்க வேண்டும்; இந்திய அரசு வழங்கும் மாத நிவாரணத்தை அதிகரிக்கவேண்டும்; முகாமில் ஆரம்பப்பள்ளி ஒன்றை ஆரம்பிக்கவேண்டும்; வைத்திய வசதிகள் வழங்க வேண்டும்."—ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இந்த உண்ணாவிரதம் நடத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## ஜி. சீ. ஈ. [உயர்தர] பரீட்சை:

# தனிப்பட்டோரின் புள்ளிகள் நேற்று வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், பெப். 11

1991இல் நடைபெற்ற விசேட ஜி. சீ. ஈ. [உயர்தரம்] பரீட்சையில் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் கூட்டுப்புள்ளி விவரப் பட்டியல் நேற்று யாழ். கல்வி அலுவலகத்துக்குக் கிடைத்துள்ளது.

தமக்குரிய கூட்டுப் புள்ளி விவரத்தை அறிய விரும்புவோர் தத்தமது சுட்டிலக்கங்களுடன் யாழ். கல்வி அலுவலகத்தில் வந்து புள்ளிகளை அறிந்து செல்லலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சையில் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகளின் கூட்டுப் புள்ளி விவரங்கள் கடந்த மாதம் வெளியானது தெரிந்ததே. [உ-5]

# ஸ்ரீலங்காவுக்கு எதிரான நிலையில் பிரிட்டன் உறுதி!

ஸ்ரீலங்காவுக்கு நிதி உதவியோ அல்லது ஆயுத உதவியோ வழங்குவதில்லை என்று பிரிட்டன் மீண்டும் கூறியுள்ளது.

உதவும் நாடுகள் ஸ்ரீலங்காவுக்கு பொருளாதார உதவிகளை வழங்க முடிவு செய்துள்ள போதிலும், பிரிட்டன் தனது முந்திய நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ-எ]


## குருக்கள் தேவை

பிரான்பற்று பெரிய வளவு முருகன் ஆலயத்தில் நித்திய பூசை மற்றும் கருமங்கள் நடாத்துவதற்குத் தகுதி வாய்ந்த குருக்கள் தேவை.

மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்.

இடம்: கோயில் முன்பாக உள்ள கடை

ஆலய பரிபாலன சபை

பெரிய வளவு முருகன் ஆலயம்,
பிரான்பற்று. [19669]


## கண்ணீர் அஞ்சலி

### உயர்திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம்

உயர்திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம் அமரராகிய துக்கச் செய்தி கேட்டு எமது கண்ணீர் அஞ்சலியை அகம் உருகி சமர்ப்பிக்கின்றோம்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்.'' — திருக்குறள்

சுந்தரம்பிள்ளை புத்தகசாலை
மாதகல் வீதி, பண்டத்தரிப்பு. (C/1503)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# புலிகளின் அதிரடித் தாக்குதல்களால் தளம்பிய நிலையில் இராணுவத்தினர்

## யுத்தம் நடக்கும் விதம் குறித்து அதிருப்தி உணர்வு

கொழும்பு, பெப். 11

கடந்த நான்கு வாரங்களில் 'அங்கும் இங்கும் எங்குமாக' விடுதலைப் புலிகள் மறைந்திருந்து நடத்திய தாக்குதல் காரணமாக, ஆயுதப் படையினரின் நிலை தளம்பியுள்ளது.

தாக்குதல் நடத்தப்பட்ட பகுதிகளில் ஆயுதப் படையினரின் பூரண ஆதிக்கம் இன்னும் வரவில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது.

கடந்த ஞாயிறு 'சண்டே ஐலண்ட்' இதழில் றோஹான் குணசேகரா எழுதிய 'வடக்கு-கிழக்கு நிலைவரம்' பற்றிய கட்டுரையில் இவ்வாறு விவரிக்கப்பட்டுள்ளது.

குறைந்தது பத்தாண்டுகளாக இடம்பெற்று வரும் கெரில்லாப் போராட்டத்தில் விடுதலைப் புலிகளின் கரந்தடித் தாக்குதல்களையும், கண்ணிவெடித் தாக்குதல்களையும் எதிர்கொண்டு முறியடிக்கும் திறமையற்ற நிலையில் தான் ஆயுதப்படையினர் உள்ளனர் என்பதையே, நான்கு வாரங்களில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை பிரதிபலிக்கின்றது.

பாதுகாப்புப் படைப் பிரிவுகள், விடுதலைப் புலிகளின் கரந்தடித் தாக்குதலைத் தேடிச் செல்லக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. இது யுத்தம் நடத்தும் விதம் குறித்து 'அதிருப்தி உணர்வை' படையினர் மத்தியில் ஏற்படுத்தி இருப்பதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

—இவ்வாறு அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-எ)

## நீதிமன்றின் உத்தரவு பத்திரிகைகளில்

கொழும்பு, பெப். 11

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் மற்றும் பொட்டம்மான் ஆகிய இருவரையும் நீதிமன்றத்தில் சரணடையும் படி கோரி விடுக்கப்பட்ட உத்தரவுகள் கொழும்பில் வெளியாகும் மும்மொழிப் பத்திரிகைகளிலும் அவர்களின் படங்களுடன் நேற்று வெளியாகி இருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

[உ-த]

## இரகசியங்களை புலிகளுக்கு இராணுவமே வழங்கியதாம்!

லலித் அத்துலத் முதலி தேசிய பந்தோபஸ்து அமைச்சராக இருந்த காலத்தில், புலிகளுக்குத் தேவையான இரகசியத் தகவல்களை இராணுவமே வழங்கியது.

இலங்கை மக்கள் கட்சியின் பிரதான அமைப்பாளர் ஒஸி அபய குணசேகரா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புலிகளின் பிடியிலிருந்த இரு இராணுவச் சிப்பாய்களை விடுவிக்க, முன்னாள் இலங்கை மக்கள் கட்சித் தலைவர் விஜேகுமாரணதுங்க எடுத்த நடவடிக்கைகளை அத்துலத் முதலி தடுத்தார் என்றும்—

பின்னர் இந்த இருவரையும் விடுவிக்க புலிகளின் இரு சிரேஷ்ட தலைவர்களை லலித் அத்துலத் முதலி விடுதலை செய்தார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-த)

## கைது

கொழும்பு, பெப். 11

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம் பெற்ற கொள்ளைகள் தொடர்பாகத் தேடப்பட்டு வந்த— தென் இலங்கையைச் சேர்ந்த ரம்யா என்ற 46 வயதுப் பெண்ணொருவர் வவுனியாவில் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டதாகக் கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது

(உ-த)

## அடுத்த ஜனாதிபதித் தேர்தலில்
## எதிர்க்கட்சிகள் சார்பில் பொது வேட்பாளர்?

கொழும்பு, பெப். 10

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரை எதிர்க்கட்சிகள் நிறுத்த வேண்டும் என்ற யோசனையை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி வற்புறுத்தும் என்று தெரிவிக்கப்படுகிறது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்து மீண்டும் நடாளுமன்ற ஜனநாயக முறையைக் கொண்டுவருவதற்கான ஆணையை மக்களிடமிருந்து பெறுவதே பொதுவேட்பாளரின் ஒரே கொள்கையாக இருக்க வேண்டும் என்று, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி அமைப்பாளர்களில் ஒருவரான திரு. ஜி. எம். பிரேமச்சந்திரா தெரிவித்தார். (இ-எ)

## தெற்கில் மாணவர் காணாமற்போன சம்பவத்தில் அதிபரும் சம்பந்தம்

கொழும்பு, பெப். 11

1989-90 களில் எம்பிலிப்பிட்டியாவில் 30க்கு அதிகமான மாணவர்கள் காணாமற்போன சம்பவத்தில் பாடசாலை அதிபர் ஒருவரும் சம்பந்தப்பட்டிருந்தார் என்பதற்கு சாட்சியங்கள் உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

அப்பாடசாலை அதிபருக்கு எதிரான சாட்சியங்களை மேல் நடவடிக்கைக்காக சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்க இருப்பதாக மனித உரிமைகள் பணியகத் தலைவர் திரு. ஜே. எப். ஏ. சூஸா தெரிவித்திருக்கிறார். இந்த மாணவர்களைக் கடத்த சதி செய்ததாக அந்த அதிபர் மீது குற்றப்பத்திரிகைத் தாக்கல் செய்ய முடியும் என்றும் அவர் சொன்னார்.

ஜே. வி. பி. இயக்கம் அப்பகுதியில் செல்வாக்குப் பெற்று இருந்த சமயத்தில் அந்த அதிபர் அந்த இயக்கத்தின் முக்கிய ஆதரவாளராக இருந்தார் என்றும் —

அப்பகுதி இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்தவுடன் அவர் இராணுவத்தினருடன் சேர்ந்து செயற்பட்டார் என்றும் விசாரணையில் தெரிய வந்திருக்கிறது.

மனித உரிமைகள் பணியகத் தலைவர் திரு. சூஸா எம்பிலிப்பிட்டியாவுக்குச் சென்று, காணாமற் போன மாணவர்களின் பெற்றோர்களைச் சந்தித்தார். அவர் திரட்டிய தகவல்களில் இருந்தே அதிபரின் ஈடுபாடு வெளிவந்ததாக அறிவிக்கப்படுகின்றது. (இ-எ)

## சுதந்திரக் கட்சி நெருக்கடி; முடிவு காண சமரசத்திட்டம்

கொழும்பு, பெப். 11

சுதந்திரக் கட்சித் தலைமைப் பதவிக்கான போட்டியை முடிவுக்குக் கொண்டுவர சமரசத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கேற்ப கட்சியின் யாப்பு திருத்தப்படவிருக்கின்றது.

இத்திட்டத்தின்படி, கட்சியின் அரசியல் தலைவராக திருமதி சிறிமா பண்டாரநாயக்காவும்—

கட்சியின் தலைவராக திரு. அனுரா பண்டாரநாயக்காவும் தெரிவு செய்யப்படுவார்கள் என்று தெரிய வருகிறது.

கட்சியின் அரசியல் தலைவர் நிதி விஷயங்களைக் கையாளுவார்.

காரியக் கமிட்டியினால் தெரிவு செய்யப்படும் கட்சித் தலைவர், யாப்பின் கீழ் நிறைவேற்று அதிகாரங்களைப் பெறுவார்.

முக்கிய விஷயங்களில் கட்சியின் அரசியல் தலைவருடன் ஆலோசனை நடத்தியே கட்சித் தலைவர் செயற்படுவார். இருவருக்கும் இடையே கருத்து வேற்றுமை ஏற்படுமிடத்து, அந்த விஷயம் மத்திய செயற்குழுவிடம் விடப்படும்.

இத்திட்டத்திற்கிணங்க கட்சியின் யாப்பு திருத்தப்படவுள்ளது. (இ-எ)

## கட்சியின் தடையை மீறி 'ஹெல உறுமய' இயங்கும்!
### பிரசார இயக்கம் 17 இல் ஆரம்பம்

கொழும்பு, பெப். 11

சுதந்திரக்கட்சி எம். பிக்கள் சிலர் அமைத்துள்ள 'ஹெல உறுமய' (தேசியபாரம்பரியம்) அணி கட்சியின் தடையையும் மீறி நாடு தழுவிய பிரசார இயக்கத்தைஇம்மாதம் 17ஆம் திகதி ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது.

இந்த அணியின் தலைவர்கள் கண்டி தலதா மாளிகையில் மத வைபவம் ஒன்றில் முதலில் கலந்து கொள்வார்கள்.

பின்னர் அவர்கள் மல்வத்தையில் மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்து தங்கள் இயக்கத்திற்கு ஆசி வழங்குமாறு கோருவர்.

பின்னர் கண்டியில் இருந்து வாகன அணியாக அனுராதபுரத்திற்கு 'ஹெல உறுமய'வின் தலைவர்களும் தொண்டர்களும் செல்வார்கள்.

அங்கு சரித்திரப் புகழ் வாய்ந்த ருவான்வெலி சயாவின் அருகில் ஒரு நாள் சத்தியாக்கிரகம் ஒன்றை அவர்கள் மேற்கொள்வார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெற்ற 'ஹெல உறுமய' அணியின் கூட்டத்தில் இம்முடிவுகள் எடுக்கப்பட்டன. [உ-எ]

## இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிக்கு டாக்டர் பட்டம்

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவியான சசிகலா கிருபாகரனுக்கு பிரிட்டனில் உள்ள லீட்ஸ் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கியிருக்கிறது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் இரசாயனவியலில் முதலாம் வகுப்பில் பட்டதாரியாகச் சித்தி அடைந்த இவர், பிரிட்டிஷ் அரசு வழங்கிய புலமைப் பரிசிலின் கீழ் லீட்ஸ் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி பெற்றார்.

இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. ஏ. கே. சிவஞானம் தம்பதிகளின் புதல்வி ஆவார். (இ-எ)

## ஜனநாயகத்தை பாதுகாக்க ஒரு நாள் சத்தியாக்கிரகம்

கொழும்பு, பெப். 11

ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக ஒரு நாள் சத்தியாக்கிரகத்தை நடத்த லலித் - காமினி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி முடிவு செய்துள்ளது.

ருவான்வெலிசேயாவில் இந்த ஒருநாள் சத்தியாக்கிரகம் இம் மாதம் 16ஆம் திகதி நடத்தப்படவுள்ளது. இதற்கிடையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முதலாவது பொதுக் கூட்டம் இம் மாதம் 29 ஆம் திகதி நடத்தப்படவிருக்கிறது.

இம் முன்னணியின் பிரசார இயக்கம் அனுராதபுரம் சிறிமகாபோதியில் மத வைபவத்துடன் நேற்று ஆரம்பிக்கப்படவிருந்தது. (இ-எ)

## 'ஹெல உறுமய' கூட்டத்தில் 17 சு. க. எம். பிக்கள்!

கொழும்பு, பெப். 11

'ஹெல உறுமய' அணியின் முதலாவது பொதுக் கூட்டம் கடந்த நான்காம் திகதி பண்டாரகமவில் நடைபெற்ற போது கூட்ட மேடையில் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 17 எம். பிக்கள் இருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவால் இந்த அணிக்கு தற்போது தடை விதிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

தடை விதிக்கப்பட முன்னர் நடந்த இக்கூட்டம், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண திரு. தொண்டமானால் தெரிவிக்கப்பட்ட யோசனைக்கு எதிராக நடத்தப்பட்டது.

நுவரெலியா மாவட்ட எம் பி. ஆனந்த திஸநாயக்கா இக்கூட்டத்தில் பேசுகையில், தொண்டமான் யோசனைகளை எதிர்க்கும் போராட்டத்தில் எம். பி. பதவியைத் துறந்து தியாகம் செய்யவும் தாம் தயாராக இருப்பதாகக் கூறினார்.

திருமலை மாவட்ட சுதந்திரக் கட்சி எம் பி. எம்.கே. டி. எஸ். குணவர்த்தனாவும் அதே தொனியில் பேசினார்.

இதற்கிடையில் தொண்டமான் யோசனைகளை அரசு ஏற்றுக் கொண்டால், குளியாப்பிட்டி பிரதேச சபையில் உள்ள 13 ஐ. தே. க. உறுப்பினர்களும் ராஜினாமாச் செய்யப்போவதாகப் பயமுறுத்தியுள்ளனர்.

தொண்டமான் தனது எல்லைதாண்டி செயற்படுகின்றார் - என்று ஐ. தே. க. உறுப்பினர் ஹென்றி டொமினிக் குளியாப்பிட்டி பிரதேச சபைக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

(இ-எ)

## அமெரிக்க - இந்திய கடற்படைகள் இந்துசமுத்திரத்தில் கூட்டுப் பயிற்சி

கொழும்பு, பெப். 11

இந்து மகா சமுத்திரத்தில் இந்திய - அமெரிக்கக் கடற்படைக்கப்பல்கள் கூட்டுக் கடற்படை பயிற்சி ஒத்திகைகளை நடத்த விருக்கின்றன. இது பற்றி இரு நாடுகளும் ஆராய்ந்து வருகின்றன என்று அறிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் 24 ஆம் திகதி இந்திய வெளியுறவுச் செயலாளர் ஜே. என். டிக்ஸிற் புதுடில்லியில் வைத்து அமெரிக்கக் கடற்படை செயற்பாட்டுப் பணிப்பாளர் அட்மிரல் பிராங்க் கெல்ஸோ, பசுபிக் பிராந்திய அமெரிக்க இராணுவத்தின் கட்டளைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜோனி எச். கோர்ன்ஸ் ஆகியோருடன் உயர் நிலைப் பேச்சுக்களை நடத்தினார்.

அப்பேச்சுக்களின் போது இந்த விடயம் பற்றி ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்திய ஆயுத படைகளுக்கு உதவிகளைப் பெறுவது பற்றியும் அங்கு பரிசீலனை செய்யப்பட்டது.

இந்தியாவின் இந்த புதிய நிலைப்பாடு காரணமாக —

இந்து சமுத்திரத்தை அமைதிப் பிராந்தியமாக்க வேண்டும் என்று இந்தியாவின் ஆதரவுடன் இலங்கை முன்னர் சமர்ப்பித்த யோசனைக்கு என்ன கதி ஏற்படும் என்ற கேள்வி இராஜதந்திர வட்டாரங்களில் எழுப்பப்பட்டுள்ளது.

''இந்து மகா சமுத்திரத்தில் உள்ள தியாகோ கார்ஸியோ தீவில் உள்ள அமெரிக்க படைகள் வெளியேற வேண்டும்; இந்து சமுத்திரத்தில் வல்லரசுகளின் பிரசன்னம் இருக்கக் கூடாது'' — என்று முன்னர் இந்தியா கொண்டிருந்த நிலைப்பாடு என்னவாயிற்று என்றும் இராஜதந்திர வட்டாரங்களில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

(இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

பெண்களுக்கான உடைகளை வெட்டித் தைக்கக் கூடிய அனுபவம் உடைய பெண்கள் உடன் தேவை. றோசுகி ரெயிலறிங், இல. 5, பருத்தித்துறை வீதி, நல்லூர். [19641]

றோல், பற்றீஸ், புரியாணி போடத் தெரிந்தவர்களும், ரீ மேக்கரும், சப்ளையர்களும், சிறு பையன்களும் தேவை. உடன் நேரில் வரவும். ஹோட்டல் றொலெக்ஸ், 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [19664]

யாழ். வர்த்தக புலன் விசாரணை பாதுகாப்பு சேவையினருக்கு உடனடியாக பாதுகாவலர்கள் தேவை. நேர்முகப் பரீட்சை 13-02-92 இல் 9—12 மணி வரை றெஜிஸ்ரார் வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாயில் நடைபெறும். [19666]

### ஓய்வூதியர் தாமதம்

இளைப்பாறிய அரச ஊழியர்களின் முதற் கொடுப்பனவுகள் தாமதமாகியதால் அதனை துரிதப்படுத்துவதற்குத் தேவையான தகவல்களை உடனடியாக அனுப்புமாறு ஓய்வூதியப் பணிப்பாளர் கோரியுள்ளார். அதற்கான விண்ணப்பப் படிவங்களை நல்லூர் ஓய்வூதியர் சங்கத்தின் செயலாளரிடம் ரூபா 10/- முத்திரை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். P. S. திருச்செல்வம், 52, செம்மணி வீதி, யாழ்ப்பாணம். (19663)

### மணமக்கள் தேவையா?

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களும், மாற்றுச் சம்மந்தத்தை விரும்புவோரும், அல்லாதவரும் நிறைய இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [19633]

### சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். ''சக்தி சரவணா'', 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. (5039)

### மெய்வல்லுநர் இலக்கம்

கல்லூரி மெய்வல்லுநர் போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்களுக்கான இலக்கங்கள் விற்பனைக்கு உண்டு. பாரதி பதிப்பகம் [A. B. Printers], 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C-1491]

## பதவி உயர்வு

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ். போதனா வைத்திய சாலையைச் சேர்ந்த நான்கு எழுதுவினைஞர்களுக்கு சேவை மூப்பு அடிப்படையில் முதலாம் தர எழுதுவினைஞர் பதவியுயர்வு சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

எழுதுவினைஞர்களான சு. கந்தசாமி, வ. முத்துலிங்கம், ப. மகேந்திரதாசன், சி சிவஞானம் ஆகியோரே பதவியுயர்வு பெற்றவர்களாவர். (இ-15)

# பொது மக்களுக்கு ஆயுதங்கள் வழங்குவதில் கட்டுப்பாடு தேவை

## மன்னிப்புச்சபையின் சிபார்சுகளில் இதுவும் ஒன்று

கொழும்பு, பெப். 11

தற்போதைய மோதலில் காணப்படும் இன ரீதியான அம்சத்தை மனதில் கொண்டு சிவிலியன்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள அரசினால் ஆயுதங்கள் வழங்கப்படுகின்றன. இப்படி ஆயுதங்கள் வழங்கப்படுவதில் கடுமையானதும் பயன்தரத் தக்கதுமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும்.

சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசுக்கு தெரிவித்து, இலங்கை அரசு ஏற்றுக் கொண்ட சிபார்சுகளில் இதுவும் ஒன்றாகும்.

மனித உரிமை மீறல்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர சர்வதேச மன்னிப்புச் சபை கொழும்பு அரசுக்கு 32 சிபார்சுகளை அனுப்பி வைத்தது தெரிந்ததே.

கொழும்பு அரசு அவற்றில் 28 சிபார்சுகளை ஏற்றுக் கொண்டது.

அவற்றில் சில ஏற்கனவே பத்திரிகைகளில் வெளியாகின.

அரசு ஏற்றுக் கொண்ட, ஆனால் பத்திரிகைகளில் வெளியாகாத மற்றும் சில முக்கிய சிபார்சுகள் வருமாறு;

★ இராணுவமும் பொலீஸும் பாவிக்கும் வாகனங்கள் அனைத்திலும் எந்த நேரமும் இலக்கத் தகடுகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

★ இராணுவத்தினர் அணியும் சீருடைகளில் அவர் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர், எந்தத் தரத்தைச் சேர்ந்தவர் என்பதைக் காட்டும் இலச்சினைத் தகடுகள் இருக்க வேண்டும்.

★ ஓர் இடத்தில் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தும் அவசியம் ஏற்படுமிடத்து, முதலில் அப்பகுதியில் உள்ள மக்களின் பெயர் விவரங்களை பதிவு செய்யும் முறை ஒன்றை கடைப்பிடிக்க வேண்டும். அதன் பின்னரே அப்பகுதியில் உள்ள மக்களை உள்ளூர் இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்ல வேண்டும். அப்படி கொண்டு செல்லப்படுபவரின் விவரம் கொண்ட ரசீது ஒன்று, இலக்கமிடப்பட்டு அந்த நபரின் உறவினர்களிடம் கொடுக்கப்பட வேண்டும்.

★ பாதுகாப்புப் படையினரால் பயன்படுத்தப்படும் முஸ்லிம் ஊர்காவல்படை மற்றும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தமிழர் அமைப்புகள் உட்பட பல ஆயுதக் குழுக்கள் மீது தற்போது கடைப்பிடிக்கப்படும் கட்டுப்பாடு பற்றி அரசு மீளாய்வு செய்ய வேண்டும்.

★ மனித உரிமை மீறல் சம்பந்தமான சகல விசாரணைகளும் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

★ கைது செய்யப்படுபவர்கள், எல்லோருக்கும் தெரிந்த உத்தியோக பூர்வ தடுப்பு முகாம்களில் காவலில் வைக்கப்பட வேண்டும்.

★ காணாமற் போனவர்களுக்கு இறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்குவது, அதற்கு காரணமானவர்களைத் தண்டிப்பது ஆகிய நடவடிக்கைகளுடன், அதனால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது இறந்தவர்களின் உறவினர்களுக்கு நியாயமான காலத்தினுள் போதுமான நட்டஈடு வழங்கப்பட வேண்டும். (இ-எ)

## தடை நீக்கம்

கொழும்பு மாவட்ட எம். பி. ஸ்ரான்லி திலகரத்தினாவை சுதந்திரக் கட்சியில் இருந்து இடைநிறுத்தி வைக்கும் உத்தரவை அக்கட்சியின் தலைமைப்பீடம் விலக்கிக் கொண்டு விட்டது.

கடந்த வாரம் நடந்த கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிரான அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணையில் திரு. திலகரத்தினா கையெழுத்திட மறுத்ததைத் தொடர்ந்து, அவரை கட்சியில் இருந்து இடைநிறுத்தி வைக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. [உ-எ]

## கலந்துரையாடல்

முதலுதவி பயிற்சி பெற்ற சனசமூக நிலைய அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று, இன்று செவ்வாய் காலை 9-00 மணிக்கு யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெறும். (இ)

## பௌத்த குருமாரும் கிறிஸ்தவ குருமாரும்!

### இரு பக்கப் பார்வை

கொழும்பு, பெப். 11

வடபகுதிக்கு அண்மையில் பௌத்த மத குருமார்களும், கிறிஸ்தவ மத குருமார்களும் தனித்தனியாக மேற்கொண்ட விஜயங்கள் பற்றிய வேறுபாட்டை 'சண்டே ரைம்ஸ்' தனது கடந்த ஞாயிறு அரசியல் கட்டுரையில் சுட்டிக்காட்டியிருக்கிறது.

பௌத்த மத குருமார்கள் வடபகுதியில் உள்ள இராணுவத் தளங்களுக்கு விஜயம் செய்து, சிப்பாய்களைச் சந்தித்து, போரில் தீர்க்கமான வெற்றிகாண வாய் மூலம் ஆசீர்வதித்து திரும்பினர்.

மறுபக்கத்தில் கிறிஸ்தவ மத குருமார்கள் குழு வடபகுதிக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளுடன் பேசியது.

விடுதலைப் புலிகளின் விருந்தாளிகளாகத் தங்கியிருந்த அவர்கள் தொண்டமானின் யோசனையின் அடிப்படையில் தீர்வு காண புலிகளை வற்புறுத்தினர்.

இப்படி அந்த அரசியல் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. [இ-எ]

## இரண்டு யுத்தங்களை எதிர்கொள்ளும் அதிகாரிகள்!

கொழும்பு, பெப். 11

ஆயுதப்படையில் உள்ள கனிஷ்ட அதிகாரிகள் ஒரே சமயத்தில் இரண்டு யுத்தங்களை நடத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

ஒரு யுத்தம்- தரையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடத்தப்படுகின்றது—

மற்ற யுத்தம்- தலைமைக் காரியாலயத்தில் 'குளுகுளு' அறைகளில் போர் முனை என்பதே தெரியாது இருந்து, இடமாற்றங்களை சமாளித்து பதவி உயர்வு பெற்று, பணிபுரியும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுக்கு எதிரானது—

இவ்வாறு கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

போர் முனையில் நின்று செயற்படும் கனிஷ்ட இராணுவ அதிகாரிகள் இதனால் விரக்தியடைந்துள்ளனர்.

சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளில் பலர் கொழும்பு தலைமை அலுவலகத்தை விட்டு வெளியே செல்லாது உள்ளனராம்.

அலுவலகத்தில் உள்ள ஒரு மேசையில் இருந்து இன்னொரு மேசைக்கு இடமாற்றம் பெறுபவர்களாகவே அவர்கள் உள்ளனர் என்றும்-

வடக்கு - கிழக்குப் போரில் கடுகத்தனைப் பங்களிப்பும் அவர்கள் செய்யவில்லை என்றும் கூறப்படுகின்றது.

இதனால் போர் முனையில் நின்று செயற்படும் கனிஷ்ட படையினரின் மனோநிலை பாதிக்கப்பட்டுள்ளதாம்.

ஆனால் பதவி உயர்வு என்று வரும்போது, போர் முனையில் நின்று செயற்படுபவர்களுக்கு வழங்கப்படுவது போன்று சிரேஷ்ட அதிகாரிகளுக்கும் பதவி உயர்வு வழங்கும் நடைமுறைதான் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆயுதப்படையில் முக்கிய பதவி ஒன்றுக்கு சிரேஷ்ட அதிகாரி ஒருவரை நியமனம் செய்யும் விஷயத்தில், உயர் மட்டத்தில் பிரச்சினை எழுந்தது என்றும்—

அமைச்சர் ஒருவர் பதவியை ராஜினாமாச் செய்யப்போவதாக பயமுறுத்தினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள்:

## அதிகாரி, 4 சிப்பாய்கள் மீது மேல் நீதிமன்றில் வழக்கு

கொழும்பு, பெப். 11

கொக்கட்டிச் சோலையில் 67 பொதுமக்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஐந்து இராணுவத்தினர் மீது மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படலாம்.

இவ் வழக்கு சட்டமா அதிபரின் பரிசீலனையில் இருக்கிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இப் படுகொலைகள் தொடர்பாக இராணுவத்தைச் சேர்ந்த ஓர் அதிகாரியும், 4 சிப்பாய்களும் தற்போது இராணுவக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததே. (உ-எ-10)


## DEEPEST SYMPATHIES

The TACEP CENTRE (Jaffna Hindu College) expresses its deepest sympathies to Mr. N. Thevapalasingam on the loss of his beloved wife.

''May her soul continue to inspire him''.

- English Literary Association.

9-2-1992 (19665)


## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி முத்துப்பிள்ளை சபாபதிப்பிள்ளை
(தங்கம்)

தோற்றம்: 06 — 05 — 1912 மறைவு: 23 — 01 — 1991

திதி: 11 — 02 — 1992

உன் உதிரத்தை உரமாக்கி......
உன் எண்ணமெல்லாம் எம் நினைவாய்
கூடிக் குலாவி குறைகளெல்லாம் போக்கி வைத்து
தேடும் சுகமெல்லாம் திளைத்திடவே வழி செய்த...
எம் தாயே......
காலமெல்லாம் உன்னை
கருணையோடு நினைவு கூருவோம்.

மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.
(பருத்தித்தீவு—7)

இல. 62, அரசடி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு. [19632]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சிவில் நாடகம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மிகப் பரந்த அளவில் சிவில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார். சிவில் நிர்வாக வேலைகளைச் சீர்செய்து கண்காணிக்கும் பொருட்டு, அவற்றை உரிய முறையில் செயற்படுத்தவென மேலதிக அரசாங்க அதிபர் தரத்தில் உவ்ள ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணக் குடாநாடு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில், அவர்களின் நிர்வாகக் கண்காணிப்பின் கீழ் உள்ளது என்ற நிலையை மறைப்பதற்கான ஒரு முயற்சி இது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டுமல்ல வடக்கின் ஏனைய பிரதேசங்களிலும் நிர்வாகம் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே நடக்கின்றது.

இது வடக்கில் அரசாங்கத்தின் அதிகாரம் செல்லுபடியாகாமல் போயிற்று என்பதற்கு அத்தாட்சி. அதாவது வடக்கில் போர் தொடர்ந்தாலும் நிர்வாக அதிகாரத்தைத் தன்னிடம் வைத்திருக்கமுடியாமல் அரசு தோல்விகண்டுவிட்டது என்பதை எடுத்துக்காட்டுவது.

வடக்கில் அரசாங்க ஆணை நடக்கவில்லை, அங்கு அரசு தோல்விகண்டுவிட்டது என்பதை தென்னிலங்கை அரசியல் விமர்சகர்கள் அடிக்கடி ஆணித்தரமாக, உறைக்கும் வண்ணம் சுட்டிக்காட்டி வருகிறார்கள். இது விடயம் சர்வதேச மட்டத்திலும் அரசாங்கத்தின் பலவீனத்தை உறுதி செய்வதாக உள்ளது.

அந்தப் பலவீனந்தை மூடி மறைத்து யாழ்ப்பாணத்திலும் அரசின் அதிகாரம், ஆணை செயலில் உள்ளது என்று காட்டுவதற்கான முயற்சியே இந்தச் சிவில் நிர்வாக ஏற்பாடுகள் எல்லாம். அரசியல் வட்டகையில் ஆடப்படும் போலி நாடகங்கள் போன்ற ஒரு சிவில் நாடகமாகவே இது அமையும். மிகப் பிரதான நோக்கமும் அதுவே.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் சரி. ஏனைய தமிழ் மாவட்டங்களிலும் சரி; இராணுவ நடவடிக்கைகளின் போது இடம்பெயர முடியாமல் சிக்குண்டுபோன மிகக் குறைந்த எண்ணிக்கையான மக்களே இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாழ்கிறார்கள்.

அவர்களின் அடிப்படைத் தேவைகளான உணவு மற்றும் மருத்துவ சேவைகள் கூட ஸ்தம்பித்துப் போயுள்ளன. சிக்குண்டவர்களில் பெரும்பாலானோர் வயதானோர்கள்.

நேற்றைய உதயனில் காரைநகரில் சிக்குண்ட ஒருவர் தமது நண்பருக்கு மனம் அழுது எழுதிய கடிதத்தின் சாரம் பிரசுரமாகி இருந்தது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். காரைநகரைப் போலவே குடாநாட்டில் இராணுவப் பிடியில் உள்ள ஏனைய தீவுப் பகுதிகளும் உள்ளன என்பதைச் செல்லித் தெரிய வேண்டியதில்லை.

தீவுப்பகுதிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள சிவில் நிர்வாக அதிகாரி இராணுவத்தின் உத்தரவை மீறி எதுவும் செய்துவிட முடியாது. வெறும் இணைப்பு அதிகாரியாகவே அனுப்பப்பட்டிருக்கிறார். எனவே அவர் அங்குள்ள மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்குப் பெரிதாக எதுவும் செய்துவிட முடியாது. அதாவது தீவகத்தில் சிக்குண்ட மக்களின் கஷ்டங்கள் நீங்கிவிடும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. இப்போதைய அவலங்களும், விரக்தி மிக்க வாழ்க்கையும் தொடரவே செய்யும். இராணுவ அதிகாரமே மேலோங்கி நிற்கும்!

# காஷ்மீருக்காக மீண்டும் ஒரு போர்

# எல்லை ஊடுருவலால் வெடிக்குமா?

தெற்காசிய பிராந்தியத்தில் யுத்தம் ஒன்றை ஏற்படுத்தக் கூடிய காரணிகளில் ஒன்றாகக் கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக காஷ்மீர் மாநிலம் இருந்து வருகிறது.

காஷ்மீருக்காக மீண்டும் ஒரு யுத்தம் என்ற பதற்ற நிலை இப்போது ஏற்பட்டுள்ளது. அது பற்றிய ஒரு கண்ணோட்டம் இது.

இந்தியாவின் ‘குளுகுளு’ மாநிலமாகக் காஷ்மீர் திகழ்கிறது. ஆனால், தெற்காசியப் பிராந்தியத்தில் (புவியியல் அரசியலில்) அது ஓர் ‘எரிமலை’ ஆகவே கணிக்கப்படுகிறது.

காஷ்மீருக்காக இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையே இரண்டு யுத்தங்கள் இடம்பெற்றன. முதலாவது யுத்தம் 1947 இலும் இரண்டாவது யுத்தம் 1965 இலும் இடம்பெற்றன.

மூன்றாவது யுத்தம் ஒன்றில் இந்த இரு நாடுகளும் 1971 இல் ஈடுபட்டன. அது காஷ்மீருக்காக நடத்தப்படவில்லை. ஆனால் அந்த யுத்தம், பாகிஸ்தானில் இருந்து கிழக்கு வங்காள மாநிலம் பிரிந்து, பங்களாதேஷ் என்ற புதிய நாடு ஒன்று உலகில் தோன்றக் காரணமாக அமைந்தது.

எப்படியாவது காஷ்மீர் மாநிலத்தை இந்தியாவில் இருந்து தனதாக்க வேண்டும் என்ற பாகிஸ்தானின் இலட்சியத்துக்கு மூன்றாவது யுத்தம் உரமூட்டக் காரணமாகியது.

### பாகிஸ்தானின் ஆத்திரம்

கிழக்கு வங்காளம் பறிபோன ஆத்திரம் காரணமாக பாகிஸ்தான் அதுமுதல் இந்தியாவில் தோன்றிய பிரிவினைவாதக் குழுக்களுக்கு மறைமுக ஆதரவை வழங்க ஆரம்பித்தது.

முதலில் காலீஸ்தான் என்ற தனிநாடு கோரும் பஞ்சாப் சீக்கியத் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தானின் மறைமுக ஆசியுடன் ஆயுதமும், பயிற்சியும் கிடைத்தன. எல்லை தாண்டிச் சென்று பாகிஸ்தானில் அமைக்கப்பட்டிருந்த முகாம்களில் பயிற்சிபெற்று ஆயுதங்களுடன் திரும்பிய சீக்கியத் தீவிரவாதிகள், பஞ்சாப் மாநிலத்தில் நடத்திவரும் விடுதலைப் போராட்டம் இன்று இந்திய அரசியலில் ஒரு சவாலாகவே விளங்குகின்றது.

இந்தியாவில் உள்ள செல்வச் செழிப்புள்ள மாநிலங்களில் ஒன்றான பஞ்சாப் மாநிலத்தில் மத்திய அரசின் ‘ஆணை’ செல்லுபடியாவதில்லை.

— தீபன்ராஜா —

கிழக்கு வங்காளத்தைப் பிரித்துப் புதிய நாடு ஒன்றை உருவாக்கிய யுத்தத்தை நடத்தியவர் இந்திரா காந்தி. அவரைச் சீக்கியத் தீவிரவாதிகளே படுகொலை செய்யும் அளவிற்கு பாகிஸ்தானின் ஆத்திரம் விஸ்வரூபமும் எடுத்திருந்தது தெரிந்ததே.

அதே சமயம் காஷ்மீரிலும் தனது மறைமுக ஊடுருவலை பாகிஸ்தான் ஆரம்பித்தது. தனது கட்டுப்பாட்டில் உள்ள ஆஸாத் - காஷ்மீரில், இந்தியக் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரை விடுவிக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் இயங்கி வந்த கெரில்லா அமைப்புகளுக்கு பாகிஸ்தான் உதவ ஆரம்பித்தது.

1989 இல் காங்கிரஸ் அரசு கவிழ்ந்து ஜனதா தள் அரசு வி. பி. சிங் தலைமையில் ஏற்பட்டதைத் தொடர்ந்து காஷ்மீர் மாநிலத்தில் விடுதலைக் கோஷம் தீவிரமாக எழும்ப ஆரம்பித்தது.

### காஷ்மீர் கிளர்ச்சி

இந்தியாவின் பாதுகாப்புப் படையினர் அந்தச் சமயத்தில் காஷ்மீர் மாநிலத்தில் பலம் பொருந்தியவர்களாக இருக்கவில்லை. இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீர் மாநிலத்திலேயே பகிரங்கமாக பஞ்சாப் மாநிலத்தில் சீக்கியத் தீவிரவாதிகள் செயற்படுவது போன்று - பகிரங்கமாக காஷ்மீர் விடுதலை கோரும் தீவிரவாதிகளின் அமைப்புகள் பல செயற்பட ஆரம்பித்தன.

அன்று தொடக்கம் இந்தியாவை ‘இரட்டைத் தலைவலி’ பிடித்துக் கொண்டது. இதன் சூத்திரதாரி ஒருவரே (பாகிஸ்தான்) என்பது உலகறிந்த உண்மையாகியது.

இதன் காரணமாக—

இந்திய— காஷ்மீர் மாநிலத்தில் புதுடில்லி அரசின் ‘ஆணை’ செல்லாததொன்றாகியது. சிவில் நிர்வாகம் சீர்குலைந்தது.

இக்கட்டத்தில் —

காஷ்மீரும் இந்தியாவின் ஒரு பகுதியே என்பதை நிலைநிறுத்துவதற்காக பாரதீய ஜனதாக் கட்சி கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீருக்கு ‘‘ஒற்றுமை யாத்திரை’’ ஒன்றை நடத்தியது. ஜம்மு வரை சென்ற அந்த யாத்திரை, அதற்கப்பால் செல்ல பாதுகாப்புக் காரணங்கள் இடங்கொடுக்கவில்லை.

## இன்று அத்துமீறி நுழைவதற்கு தீவிரவாதிகள் திடசங்கற்பம்!

இறுதியில் விமானப்படையின் விமானம் ஒன்றில் பாரதீய ஜனதாத் தலைவர் டாக்டர் முரளி மனோகர் ஜோஷி காஷ்மீர் சென்று ‘சௌபாக்’ மைதானத்தில் படையினர் சுற்றி நிற்க இந்திய தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். அந்த வேளையில் கொடியேற்றப்பட்ட இடத்திற்குச் சில யார் தள்ளி தீவிரவாதிகள் ஏவிய ரொக்கெட் விழுந்து வெடித்தது.

### எல்லை ஊடுருவல்

தீவிரவாதிகளின் பலம் எத்தகையது என்பதை அச்சம்பவம் உணர்த்திற்று. அதனைத் தொடர்ந்தே, இப்போது ‘எல்லை தாண்டும் யாத்திரை’யை நடத்தப்போவதாக ஜம்மு — காஷ்மீர் விடுதலை முன்னணி அறிவித்திருக்கிறது.

சுமார் ஒரு லட்சம் தொண்டர்களுடன் பாகிஸ்தானின் ஆஸாத் — காஷ்மீரின் எல்லையைத் தாண்டி இந்திய — காஷ்மீரினுள் நுழையப் போவதாக அந்த முன்னணியின் தலைவர் அமானுல்லாகான் அறிவித்திருக்கின்றார்.

இன்று (செவ்வாய்க்கிழமை) நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ள இந்த ‘எல்லை ஊடுருவல் யாத்திரை’ மீண்டும் ஒரு (நான்காவது) இந்திய— பாகிஸ்தான் யுத்தத்திற்கு வழி கோலுமா என்ற கேள்விக்குறியை எழுப்பியிருக்கின்றது. எல்லைப் புறத்தில் அதற்கான ஆரம்பப் பதற்ற நிலை உருவாகியிருக்கிறது.

இரண்டு காஷ்மீர்களுக்கும் இடையேயான எல்லை, 1947 இல் இடம் பெற்ற இந்திய — பாகிஸ்தான் முதலாவது யுத்தத்தைத் தொடர்ந்து ஏற்பட்டது.

காஷ்மீர் நமதே என்ற கோஷத்துடன் 1947 இல் இரு நாடுகளும் [illegible] ஐ. நா. தலையிட்டது.

அதனைத் தொடர்ந்து, சண்டை அந்தளவில் நிறுத்தப்பட்டது. அப்போது பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் காஷ்மீரின் ஒரு பகுதி இருந்தது.

அதற்கு ஆஸாத் — காஷ்மீர் என்று பெயரிடப்பட்டு, பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிற்குள் சென்றது. எஞ்சியது ஜம்மு — காஷ்மீர் என்ற பெயரில் இந்தியாவின் கட்டுப்பாட்டிற்குள் சென்றது.

அப்போது வரையறுக்கப்பட்ட எல்லையே இரண்டு காஷ்மீர்களுக்கும் நிர்ணயிக்கப்பட்ட எல்லையாக இருந்து வருகின்றது. அந்த எல்லையை மீற முயன்றபோதே இருநாடுகளுக்கும் இடையே இரண்டாவது யுத்தம் ஏற்பட்டது.

இரண்டு யுத்தங்களைத் தொடர்ந்து இரண்டு காஷ்மீர்களுக்கும் இடையேயான தற்போதைய எல்லையை கௌரவிப்பது என்று கூறும் இந்தியாவும்— பாகிஸ்தானும் சிம்லா உடன்படிக்கையைச் செய்து கொண்டன. அந்த உடன்படிக்கையில் இந்தியாவின் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியும், பாகிஸ்தானின் அப்போதைய பிரதமர் பூட்டோவும் கையெழுத்திட்டனர்.

### ஐ. நா. தலையீடு?

அந்த உடன்படிக்கையின் படி இரு நாடுகளும் ஏற்றுக்கொண்ட இன்னொரு விஷயம் காஷ்மீர் பிரச்சினையில் எழும்பேதங்களை இருதரப்பினருமே பேசித்தீர்த்துக் கொள்ள வேண்டும்; மூன்றாமவருக்கு அதில் இடமில்லை என்பதுமாகும்.

இது விஷயத்தில் இந்தியா மிகவும் ‘அழுங்கு’ப்பிடியுடனே இதுவரை காலமும் செயற்பட்டு வந்தது. காஷ்மீர்ப் பிரச்சினையை உலக அரங்கில் எடுக்க பாகிஸ்தான் முயற்சி செய்தபோதெல்லாம், அதனை ஆரம்பத்திலேயே மழுங்கடிக்கச் செய்யும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டு வந்தது. அப்போது எல்லாம் பாகிஸ்தான் அமெரிக்க சார்பு அணியில் தீவிர பங்காளராக இருந்து வந்தது.

சோவியத் யூனியனின் மறைவை அடுத்து உலக அரங்கில் ஏற்பட்டு வந்த எதிர்பாராத மாற்றங்கள் காரணமாக இந்தியா அமெரிக்க சார்பு நாடாகவும், பாகிஸ்தான் அமெரிக்க எதிர்ப்பு நாடாகவும் மாறத் தொடங்கியுள்ளன.

இப்புதிய உலக சூழ்நிலையில் மீண்டும் எரிமலையாகியுள்ள காஷ்மீர் விவகாரத்தில், மூன்றாமவரின் தலையீடு தேவையில்லை என்ற இந்தியாவின் ‘அழுங்கு’ப்பிடி தளர்ந்திருப்பதாக தெரிய வந்துள்ளது.

காஷ்மீர்ப் பிரச்சினையில் பதற்றத்தைத் தணிக்க, ஐ. நா. நிரந்தர உறுப்பு நாடுகள் பாகிஸ்தான் மீது அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என்று இந்தியா நேரடியாகக் கோரியிருப்பது, தனது முன்னைய நிலைப்பாட்டில் இருந்து இந்தியா இறங்கிச் செல்வதையே எடுத்துக் காட்டுவதாக அவதானிகள் கூறுகின்றார்கள். ஐ. நா. அமைப்பில் அமெரிக்காவின் ஆதரவு தமக்கு இருக்கிறது என்ற எண்ணத்தில் இந்தியா இப்புதிய நிலைப்பாட்டை எடுத்திருக்கலாம் என்று கருதவும் இடமுண்டு.

எனினும் — காஷ்மீர் தகராற்றில் ஐ. நா. வின் தலையீட்டைக் கோரவில்லை என்று இந்தியா மீண்டும் கூறியிருப்பது இராஜதந்திர அரங்கில் ஒரு ‘சப்பைக்கட்டு வாதமாகவே’ கணிக்கப்படுகின்றது.

பதற்றத்தைத் தணிக்க பாகிஸ்தான் மீது நிர்ப்பந்தம் செலுத்துங்கள் என்று கோருவது ஐ. நா.வின் தலையீட்டைக்கோருவது ஆகாதா? என்ற கேள்வியும் எழுகிறது.

எல்லையை ஊடுருவப் போவதாக தீவிரவாதிகள் அறிவித்துள்ள இத்தருணத்தில்—

இதனால் ஏற்பட்டுள்ள பதற்றத்தைத்தணிக்க பாகிஸ்தான் மீது அழுத்தம் மேற்கொள்ளும்படி ஐ. நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளின் உதவியை (தலையீட்டை ?) இந்தியா கோரியுள்ள நிலையில்— பாகிஸ்தான் எப்படிச் செயற்படப் போகின்றது?

காஷ்மீர் மாநில விடுதலைக்காக போராடும் தீவிரவாத அமைப்புக்கள் பல இயங்குகின்றன. அவற்றில் ஒன்றுதான் இன்று செவ்வாய்க்கிழமை எல்லையை ஊருவல் செய்யும் யாத்திரையை நடத்தப் போவதாக அறிவித்திருக்கும் அமானுல்லாகான் தலைமையிலான ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணியாகும்.

இந்தியாவில் இருந்து காஷ்மீர் மாநிலத்தைப் பிரித்து தனிநாடாக்க வேண்டும் என்ற இலட்சியத்தை முன் வைத்து இந்த அமைப்பு ஆயுதப் போராட்டத்தை நடத்துகின்றது. ஏனைய அமைப்புகளோ இந்தியாவில் இருந்து பிரித்தெடுக்கப்படும் காஷ்மீர் மாநிலத்தை பாகிஸ்தானுடன் இணைக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டவையாகும். இந்த அமைப்புகளுக்கே பாகிஸ்தானின் நேரடி ஆசீர்வாதம் இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

### அமானுல்லாகான் நிலை

இந்த சூழ் நிலையில், அமானுல்லாகானின் அமைப்பின் எல்லை தாண்டும் போராட்டத்திற்கு பாகிஸ்தானின் ஆதரவு எப்படி இருக்கும்? என்பது இஸ்லாமபாத் அரசு, அந்த முன்னணியின் ஊடுருவல் யாத்திரையைத் தடை செய்யப்போவதாக அறிவித்ததில் இருந்து ஓரளவு தெரிய வருகின்றது.

பாகிஸ்தான் அரசு விதித்துள்ள தடையையும் மீறி ஒரு லட்சம் பேருடன் எல்லை ஊடுருவல் யாத்திரையை நடத்தப் போவதாக அமானுல்லாகான் மீண்டும் உறுதி செய்திருக்கின்றார்.

### உபகண்ட நிலைமை

உறுதி மொழிப்படி அவர் ஊடுருவலை நடத்துவாரா?

தடை உத்தரவை மீறும் அமானுல்லாகானை பாகிஸ்தான் அரசு கைது செய்து பதற்றத்தைத் தணிக்குமா?

தடை உத்தரவை மீறி நடத்தப்படும்ஊருடுவலை இந்திய இராணுவம் முறியடிக்குமா? அது இன்னொரு இந்திய-பாகிஸ்தான் போருக்கு வழி கோலுமா?

இக் கேள்விகளுக்கு மத்தியில்— ஊடுருவல் பயமுறுத்தல் இன்னொரு யுத்தமாக வெடிக்காமலும் போகக் கூடும் என்பது ராஜதந்திர வட்டாரங்களின் கணிப்பாகும்.

எது எப்படியிருப்பினும்— எந்த நேரத்திலும் வெடிக்கக் கூடிய எரிமலை போன்றே காஷ்மீர் பிரச்சினை இருக்கப் போகிறது என்பது மட்டும் நிச்சயம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தபால் விநியோகம்!

கொழும்பு, பெப். 11

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கிராமங்களில் தபால் விநியோகம் செய்யும் திட்டம் ஒன்றை தபால் அமைச்சு ஆரம்பிக்கவிருக்கின்றது.

பரீட்சார்த்தமாக இத்திட்டம் குருநாகலை மாவட்டத்தில் எதிர்வரும் மார்க் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று அமைச்சர் ஏ. எம். எஸ். அதிகாரி தெரிவித்தார்.

தபால் விநியோகம் செய்வதற்கு ஜனசக்தித் திட்டத்தின் கீழ் நன்மை பெறுபவர்களை கூட்டுறவுச் சங்கங்கள் பயன் படுத்தலாம் என்றும்—

அவர்களுக்குச் சைக்கிள் வழங்கப்படும் என்றும்—

அவர்கள் கிராமவாசிகளுக்கு பொருள்களையும் விநியோகம் செய்யலாம் என்றும் தபால் அமைச்சுச் செயலாளர் திரு. குணசேகரா கூறினார். (உ-எ)

## மரண அறிவித்தல்கள்

### செல்லப்பா அப்பையா

[சோடாக் கடை சுன்னாகம்], [கார்க்கார அப்பையா]

உடுவில் கிழக்கு சுன்னாகம் வாசியான செல்லப்பா-அப்பையா 10-2-92 இல் காலமானார். இவர் இராசம்மாவின் அன்புக் கணவரும், விஜயரத்தினம் [சோடாக்கடை, சுன்னாகம்], திருமதி சத்தியநாதன் இராசமலர், தருமரத்தினம், திருமதி ஜெயபாலசுந்தரம் றஞ்சினி, ஜெயரத்தினம் [ஜேர்மனி], குணரத்தினம் [சுவிஸ்] ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியபாமா, சத்தியநாதன் [இலங்கை மின்சார சபை, சுன்னாகம்], ஜெயபாலசுந்தரம் [யாழ். பல்கலைக் கழகம்], ஜெயகௌரி, கெங்காதேவி [ஜேர்மனி], உதயகலா [சுவிஸ்] ஆகியோரின் அன்பு மாமனாரும், காலம்சென்ற பொன்னுத்துரை, அப்புத்துரை, பொன்னையா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பகல் 1 மணிக்கு பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

தகவல்:
மு. சத்தியநாதன்

இலங்கை மின்சார சபை, சுன்னாகம். (19672)

### திருமதி நாகரத்தினம் விநாயகமூர்த்தி

மண்டைதீவைச் சேர்ந்த திருமதி நாகரத்தினம் விநாயகமூர்த்தி அவர்கள் 10-2-92 அன்று இணுவிலில் காலமானார். இவர் வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற பொன்னம்பலம் - ஏலவார் குழலி அம்மை தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற பொன்னம்பலம் விநாயகமூர்த்தியின் அன்பு மனைவியும், கலாநிதி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், காலஞ்சென்ற திருமதி பாக்கியலக்ஷ்மி. நடராசா, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருநாவுக்கரசு அவர்களின் அன்புத் தாயாரும், பராசத்தி அவர்களின் மாமியாரும், விநாயகமூர்த்தி [யாழ். மாநகரசபை], சத்தியமூர்த்தி, லோகேஸ்வரி [ஐ. நா. ச. சமாசம்], லோகநாதன், ரகுநாதன், கேதாரநாதன் [மகாத்மா அச்சகம், ஏழாலை], பஞ்சாட்சரநாதன் [கோட்டக்கல்வி அலுவலகம், வேலணை], விக்கினேஸ்வரி, நாகேஸ்வரி, ஜெகநாதன், ஜெகதீஸ்வரி, செந்தில்நாதன், திருமதி கோமளவல்லி, திரு. ரகுநாதன் [சுவிஸ்], திரு. இளஞ்செழியன் [அஜந்தாஸ் புடைவை மாளிகை] ஆகியோரின் அன்புப் பேத்தியும், சலஷா, சலோஜனன், வேணுஷா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை [11-2-92] இணுவிலில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3 மணிக்கு தகனக்கிரியைக்காக காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
பொ. வி. திருநாவுக்கரசு

கே. கே. எஸ். றோட்,
இணுவில். [19671]

### திருமதி துரையப்பா பார்வதி

திருமதி துரையப்பா பார்வதி நேற்று [10-02-92] காலமானார்.

இவர் காலஞ்சென்ற துரையப்பா [முன்னாள் ஐலண்ட் மோட்டார் பஸ் கம்பனியின் பிரதம பங்காளர்] அவர்களின் அன்பு மனைவியும், சி. சுவத்திரையின் சகோதரியும், விசாலாட்சி [கனடா], சரஸ்வதி [கொழும்பு], இராசலட்சுமி [கனடா], நாகேஸ்வரி, மாணிக்கவாசகர் [பைனல் டீசல் என்ஜினியேர்ஸ் உரிமையாளர்], பரமேஸ்வரி [கொழும்பு], பிரேமாவதி [கொழும்பு] ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தசாமி [கனடா], நாகராசா [பொலீஸ் உத்தியோகத்தர், கொழும்பு], காலஞ்சென்ற இராசரத்தினம் [இ. போ. ச.], திருச்செல்வம், பத்மநாதன், சபாரத்தினம், செல்வராணி ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (11-2-92) இன்று காலை 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

129, 2 ஆம் குறுக்குத் தெரு. தகவல்:
யாழ்ப்பாணம். து. மாணிக்கவாசகர்
[19668] [மகன்]

# கப்பலில் தனியாருக்கு அதிக பொருள்கள்

யாழ்ப்பாணம், பெப். 11

'குமண' கப்பலில் இம்முறை தனியாருக்குரிய பொருள்கள் அதிகளவில் எடுத்து வரப்பட்டுள்ளன.

தேங்காய் எண்ணெய், மரக்கறி எண்ணெய், மண் எண்ணெய் என்பனவும் இம்முறை அதிகளவில் எடுத்து வரப்பட்டுள்ளன.

# மண்டைதீவில் குண்டுச் சத்தம்

குருநகர், பெப். 11

நேற்று நண்பகல் 1 மணியளவில் அல்லைப்பிட்டி-மண்கும்பான் பகுதியில் பாரிய குண்டுச் சத்தம் கேட்டது.

குண்டு வெடிப்பின் அதிர்வு யாழ். நகரைத் தாண்டியும் உணரத்தக்கதாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ-51]

# ஷெல் தாக்கு!

யாழ்ப்பாணம், பெப். 11

மாவிட்டபுரம் இராணுவ முகாமில் இருந்து நேற்று நண்பகல் 12-30 மணிக்கு சுற்றுப்புறக் குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை மாதகல், கீரிமலை, திருவடிநிலை, பொன்னாலை கடற்பகுதியில் இருந்தும் கடற் படையினர் கரையோரப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். இடையிடையே துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. [உ-28-15]

# விபத்தையடுத்து கோஷ்டி மோதல்

யாழ்ப்பாணம், பெப். 11

ஆனைக்கோட்டை பள்ளம் காடு பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற லொறி-சைக்கிள் விபத்தில் ஒரு பெண் மரணமானதை அடுத்து அப்பகுதியில் நேற்று இரண்டாவது நாளாக கோஷ்டி மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன.

கோஷ்டி மோதலில் காயமுற்றதாகக் கருதப்படும் செல்வராசா மோகனராசா [வயது 15] முகத்தில் வெட்டுக் காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அப்பகுதியில் வாசிகசாலை ஒன்று சேதப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## யாழ். ஆஸ்பத்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பகுதியில் — கர்ப்பிணி கிளினிக் பகுதியில் — வைத்திய சிகிச்சை கிளினிக், முறிவு, நெரிவு கிளினிக் ஆகியவற்றுக்கு அருகில்குண்டு வெடித்தது. இதனால் நோயாளர் அமரும் வாங்குகளும், கட்டடக் கூரையும் சிதறின.

கிளினிக் நடைபெறும் வேளையில் இப்பகுதியில் நோயாளரும், ஆஸ்பத்திரி ஊழியர்களுமாக சராசரி 300 பேர் வரை காணப்படுவது வழக்கம்.

எனினும் நேற்று குண்டு வெடித்த சமயம் — மாலையாதலால் — தெய்வாதீனமாக எவரும் அப்பகுதியில் இருக்கவில்லை. இதனால் பேரிழப்பு தவிர்க்கப்பட்டது. (உ-3-5-15-131)

## வடக்கில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஒருவர் புதுடில்லி சென்றிருந்தார். இவ்விஜயம் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பல ஊகங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்திய வெளியுறவுச் செயலாளர் டிக்ஸிற் உட்பட இந்திய அதிகாரிகள் சிலரைச் சந்தித்து, வடக்கு-கிழக்கில் ஆரம்பிக்கப்படக் கூடிய யுத்தத்தை நிறுத்தச் செய்வதற்கு இந்திய உதவிகளைப் பெறுவதே அவரின் விஜயத்தின் நோக்கம் என்று எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

# 3,170 தொன் பொருள்கள் 'குமண' கப்பலில் வந்தன

3 ஆயிரத்து 170 மெற்றிக் தொன் பொருள்களுடன் 'குமண' கப்பல் நேற்றுக் காலை 10 மணியளவில் பருத்தித்துறையை வந்தடைந்தது.

இதில் ஆயிரத்து 787 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் யாழ். செயலகத்துக்கும், ஆயிரத்து 290 மெற்றிக் தொன் பொருள்கள் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும், தனியாருக்கும் எடுத்து வரப்பட்டுள்ளன.

இவற்றில் 700 மெற்றிக் தொன் அரிசி, 700 மெற்றிக் தொன் மா, 100 மெ. தொன் சீனி, 90 மெற்றிக் தொன் பால் மா வகைகள், 110 மெற்றிக் தொன் பயறு, 27 மெற்றிக் தொன் பயற்றம் பருப்பு என்பன யாழ் செயலகத்துக்குரிய உணவுப் பொருள்களாகும்.

தற்போது பருத்தித்துறையில் தரித்து நின்று பொருள்களை இறக்கி வரும் 'லில்லி' கப்பல் புறப்பட்ட பின்னர் 13 ஆம் திகதியே 'குமண' கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. [ஓ-5]

# மட்டக்களப்பு எல்லையில் சிங்களக் குடியேற்றம்!

மட்டக்களப்பின் எல்லைப் புறத்தில் உள்ள தமிழ்க் கிராமங்கள் பலவும் தீவிர சிங்களக் குடியேற்றத்துக்குள்ளாகி வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மூன்று வாரங்களில் மட்டும் மூன்று தமிழ்க் கிராமங்கள் சிங்கள மயமாக்கப்பட்டுள்ளன என்றும்—

கடந்த ஆண்டில் மட்டக்களப்பு — பொலனறுவை எல்லைப் பகுதியில் 15 கிராமங்கள் இராணுவ உதவியுடன் சிங்களக் குடியேற்றங்களாக மாற்றப்பட்டன என்றும்—

இவற்றில் ஆறு கிராமங்கள் பொலனறுவையின் உதவி அரசாங்க அதிபர் பிரிவுடன் இணைக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-5]

# இன்று காலை முதல் காஷ்மீரில் ஊரடங்கு!

## எனினும் ஊடுருவல் நடக்குமாம்

ஸ்ரீநகர், பெப். 11

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் தலைநகர் ஸ்ரீநகர் உட்பட முக்கிய நகரங்கள் பலவற்றில் இன்று செவ்வாய் காலை 6 மணி முதல் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படும் என்று நேற்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை காஷ்மீர் எல்லைப் புறத்தில் உள்ள 250 கிலோ மீற்றர் பிரதேசத்தில் விமானக் கண்காணிப்பு உட்பட பெரும் உஷார் நிலையில் இந்தியத் துருப்புகள் வைக்கப்பட்டுள்ளன.

திட்டமிட்டபடி செவ்வாய்க்கிழமை (இன்று) இந்திய எல்லையைக் கடக்கப் போவதாக ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணி நேற்று மீண்டும் அறிவித்துள்ளது.

தமது தொண்டர்களில் சுமார் 250பேரை பாகிஸ்தான் பொலீஸார் ஏற்கனவே கைது செய்திருந்தாலும் கூட, புதிய வழிமுறையில் ஊடுருவல் திட்மிட்டபடி இடம்பெறும் என்றும் - முன்னணி அறிவித்தது.

எல்லை ஊடுருவல் பேரணியில் கலந்து கொள்ள பாகிஸ்தானின் பிற பகுதிகளில் இருந்தும் ஏராளமான தொண்டர்கள் எல்லைப் புறத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர் என்றும் —

வீதிகளில் பொலீஸாரைக் குவித்து தொண்டர்கள் எல்லைப்புறத்தை நோக்கிச் செல்வதைத் தடுக்கும் நடவடிக்கையில் பாகிஸ்தான் அரசு ஈடுபட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [அ-எ]

## மரண அறிவித்தல்

### திரு. க. யோசேப்பு

திரு. க. யோசேப்பு அவர்கள் காலமாகிவிட்டார். இவர் யோ. தேவநேசத்தின் அன்புக் கணவரும் சிங்கராஜாவின் [ஆசிரியர், ஆனந்தா வித்தியாலயம்] அன்பு மைத்துனரும், சிறிஸ்கந்தராஜாவின் அன்பு சிறிய தந்தையும், தேவராஜா [Forman], திருமதி குருநாதன் [ஆசிரியை, Johnbosco], திருமதி சிவகுணம் [ஆசிரியை, U.K], திருமதி கனகநாயகம் [எழுது வினைஞர், கச்சேரி], திருமதி தயாபரராஜா [ஆசிரியை, நல்லூர் சாதனா], திருமதி தேவகுணபரன் [ஆசிரியை, கண்டி தமிழ் வித்தியாலயம்] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், அன்னம்மா, சந்திரா, காலம்சென்ற குருநாதன் [ஆசிரியர்], சிவகுணம் [கணக்காய்வாளர், U. K.], கனநாயகம் [சிறைச்சாலை உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்], தயாபரராஜா [கிளை முகாமையாளர், ப. கூ. ச.] தேவகுணபரன் [கணக்காய்வாளர், கண்டி] ஆகியோரின் அன்பு மாமனாரும் மீரா, பெனடிக்ற், மஞ்சு, மல்லிகா, டெறிற்றா, தேவச்சந்திரன், டேவிட், அருள், கெலன், கசில்டா, சந்திரன், சுபா, சுஜி, சுதன், சிந்து, மர்ஷா, ரம்மி, டெசி, தட்ஷா, பிரியா, சங்கர், அன்ரன் ஆகியோரின் அன்புப் பேரனும், சுகனி, சோபனா, பிறைன்ரன், கல்ப்பனா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னரரின் இறுதி அடக்க ஆராதனை இன்று [11-2-92] நான்கு மணியளவில் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
யோ. தேவநேசம்
[மனைவி]

34, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். [19673]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 11-2-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org